Registered No. M. 1368

ஓம்

தருமசீலன்.

பத்திராதிபர்: தி. ஆதிநயினர்.

18 DEC 1922

புத்தகம் 5. } துந்துபிஹூ ஐப்பசிமீ 1922 அக்டோபர்மீ { சஞ்சிகை 7.

விஷய சூசிகை.

	விஷயம்.	பக்கம்
1.	நீதிச் செய்யுட் சிந்தாமணி	145
2.	சூரியனுயினும் வீரியம் பேசேல் ...	146
3.	சிராவக தர்மம்	147
4.	பாலபோத விளக்கம்	157
5.	தருமோபதேசம்	159
6.	நமது பெருங்குறை	160
7.	நீதிவாக்கியங்கள்	165
8.	தூஷிப்ப தொழி	166

வருஷசந்தா ரூபா 1.] 1922. [தனிப்பிரதி அணு 0-2-0

DHARMASEELAN PRESS. MADRAS

தருமசீலன் விளம்பரம்.

இது, ஒவ்வொரு தமிழ் மாதந்தோறும் வெளிவரும். இதில், பொது நீதிகள், சங்கமருவிய நூல்களில் வெளிவராதநூல்கள் அறிவை விருத்தி செய்யத்தக்கபல நீதிகள், வியாசங்கள், பலவிநோதக்கதைகள், நாவல்கள், பொது வர்த்தமானங்கள்முதலிய பல அரிய விஷயங்கள் பிரசுரிக்கப்படும்.

சந்தா விவரம்.

வருஷம் 1-க்குத் தபாற்செலவு உட்பட இந்தியா, பர்மா, சிலோன் ஆகிய விடங்களுக்கு ரூபா 1—0—0

பினங், சிங்கப்பூர், தென் ஆப்பிரிக்கா முதலிய விடங்களுக்கு ரூபா 1—4—0; தனிச் சஞ்சிகை விலை அணா 0—2—0

கவனிப்பு.

1. சந்தாதாரராகச் சேருகிறவர்கள் தங்கள் முழுவிலாசத்தையுஞ்சுத்தமாக எழுதியனுப்ப வேண்டும்.

2. முன்பணம் செலுத்தியாவது, வி. பி. யிலாவது பத்திரிகை பெற்றுக்கொள்ள வேண்டும்; ஒரு வருஷத்துக்குக் குறைந்து பத்திரிகை கொடுக்க முடியாது; ஒரு வருஷத்துக்கிடையில் சந்தாதாரர்கள் சேர்ந்தால் அவர்களுக்கு முந்தின மாதங்களின் சஞ்சிகைகளும் சேர்த்தனுப்பப்படும்.

3. சந்தாதாரர்கள் கடிதமெழுதினால் தங்கள் சந்தா நம்பரைக் குறிப்பிட்டெழுதவேண்டும்.

4. இப்பத்திரிகைக்கு விஷயதானஞ்செய்வோர் கடிதத்தில் ஒரே பக்கத்தில் சுத்தமாக எழுதியனுப்பவேண்டும்; தூஷணையான விஷயங்களை எழுதலாகாது; பொது நன்மையான விஷயங்களே எழுதவேண்டும்; விஷயங்களைத் திருத்திக்கூட்டவும் குறைக்கவும் நமக்குப்பாத்தியமுண்டு; வியாசக்காரர் அபிப்பிராயங்கள் நம்மைச் சார்ந்தவைகளல்ல; விஷயதானஞ் செய்வோர் தங்கள் முழு விலாசத்தையும் எழுதவேண்டும்.

விளம்பர விகிதம்.

ஒரு பக்கத்திற்கு ஒருமாதத்திற்கு	ரூபா	10—0—0
அரைப்பக்கத்திற்கு	ரூபா	6—0—0
கால் பக்கத்திற்கு	ரூபா	3—0—0

விளம்பரத்தொகையை முன்பணமாகவே அனுப்பவேண்டும்.

தி. ஆதிநயினார், "தருமசீலன்" ஆபீஸ்.

26. ஆச்சாரப்பன் தெரு, ஜார்ஜ்டவுன், சென்னை

ஓம் ...ம்.

தருமசீலன்.

"அகர முதல வெழுத்தெல்லா மாதி
பகவன் முதற்றே யுலகு."

(All Rights Reserved.)

புத்தகம் 5	துந்துபிஸூ ஐப்பசிமீ 1922ஸூ அக்டோபர்மீ	சஞ்சிகை 7

நீதிச் செய்யுட் சிந்தாமணி.

பொருளின் பயன்.

"செய்கபொருள் யாருஞ்செறு வாரைச்செறு கிற்கும்
எஃகுபிறி தில்லையிருந் தேயுயிரு முண்ணும்
ஐயமிலை யின்பமற னோடெவையு மாக்கும்
பொய்யில்பொரு ளேபொருண்மற் றல்லபிற பொருளே."

(இ-ள்:) "எவரும் பொருளைத்தேடுக; அவ்வாறு தேடினால் கொல்லத்தக்க பகைவரைக் கொல்லும்வேல் அதனையன்றி வேறில்லை; அப்பொருள் இருந்த விடத்திலிருந்தே பகைவர் உயிரையும் உண்ணும்; அதனால் உண்டாகும் இன்பத்திற்கும் சந்தேகமில்லை; இன்னும் தருமத்தையும் உண்டாக்கும். ஆதலின், இங்ஙனம் தருமத்தினோடு மேற்கூறியவற்றையும் உண்டாக்கும் பொய்யில்லாத பொருளே சிறந்த பொருள்; மற்ற பொருள் நன்கு மதிக்கப்படும் பொருளல்ல" என்பதாம்.

(வி-ரை) பொருளானது தான் சேர்ந்தவரிடம் இருந்தபடியே பகைவரைக் கொல்லும்; எங்ஙனமெனில் பொருளுள்ள விடத்தில் படைசேரும்; படையால் பகைவர் ஒழிவார்கள். இன்னும் அப்பொருள், மனத்தால் விரும்பியவற்றை யெல்லாம் அடையச்செய்யு மாதலின், அதனால் சகல இன்பமும் கைகூடும். இது பற்றியே ஆசிரியர், 'இத்தகைய பொருளே சிறந்தது' என்றார். இதனால், உலகத்தில் எவரும் பொருளைத் தேடிக்கொள்ளுதல் அவசியமென்பது பெறப்படும்.

செய்க-உண்டாக்குக; இது வியங்கோள். செறுதல்-கொல்லுதல். கில்-ஆற்றற் பொருண்மையை உணர்த்தும் ஒரு வகை இடைநிலை. எஃகு-இரும்பு; அஃதாகு பெயராய்க் கருவியை உணர்த்திற்று. 'இருந்தே' என்பதில் ஏகாரம் தேற்றம். 'உயிரும்' என்பதன் உம்மை இறந்தது தழுவியது; எதிரது தழுவியதுமாம். மற்று-அசை.

(சீவகசிந்தாமணி 497.)

தருமசீலன்.

துந்துபி௵ ஐப்பசி௴.

"கூரியனாயினும் வீரியம் பேசேல்"

இதன் பொருள்:—"நீ புத்தியிலும் வல்லமையிலும் கூர்மையுடையவனா யிருந்தபோதிலும் (அதாவது, சிறந்தவனானாலும்) 'நானே வீரன்' என்று வீரியமான பேச்சுக்களைத் தற்பெருமையாகப் பேசாதே" என்பதாம்.

"கூரம்பாயினும் வீரியம் பேசேல்" என்றும் பாடபேதமுண்டு. அங்ஙனம் பாடங் கொள்ளுமிடத்து "நீ கூர்மையான அம்பைக் கையிலுடையவனா யிருந்தபோதிலும் வீரியம்பேசாதே" என்று பொருளுரைக்க வேண்டும்.

பாடபேதங்கள் எவ்வாறாயினும், 'ஒருவன் தன்னைப்பற்றி வீரியமாகப் புகழ்ந்து பேசிக்கொள்ளலாகாது' என்பதே இதன் கருத்தாம்.

எப்பேர்ப்பட்ட கெட்டிக்காரனும் தற்பெருமையாக வீரம் பேசத்தொடங்கினால், அவனுடைய புத்தியானது அவ்வாறு பேசுவதிலேயே சென்றுகொண்டிருக்குமேயன்றி முடிக்கத்தக்க காரியத்தில் தீவிரமாகச் செல்லாது. அதனால் காரியக்கேடு உண்டாகும். அன்றியும் அவன் பேச்சைக் கேட்கக்கேட்கப் பகைவர்க்கு, 'எப்படியேனும் இவனைத் தொலைத்து விடவேண்டும்' என்னும் ஆத்திரமுண்டாகும். அதனால் அவர்கள் பகைமுடிக்கும் காரியங்களை வெகு சுறுசுறுப்பாகவும், தந்திரமாகவும் செய்வார்கள்; இன்னும், அவனுடைய தற்பெருமைப் பேச்சினாலேயே அவனிடத்தில் ஜெயத்திற் காதாரமாயிருக்கும் அநேகம் இரகசியங்களையும் தெரிந்து அவற்றிற்காமுபாயங்களையும் தேடிக்கொள்வார்கள். இவ்வகைகளால் அவனுக்கு அபஜெயமே எதிலும் உண்டாகிவிடும். இங்ஙனம் தற்

பெருமை பேசி அபஜெயப் பட்டால் அதைக்காட்டினும் மானக்கேடு வேறொன்றுமில்லை. தற்பெருமை பேசாமலிருந்து அபஜெயப்பட்டாலும் அவ்வளவு மானக்கேடு நேராது. இங்ஙனம் வல்லவனே வீரியம் பேசக்கூடா தென்றபோது வல்லமையற்றவன், தற்பெருமை பேசக்கூடா தென்பதைப்பற்றி நாம் சொல்லவேண்டியதில்லை. ஆதலின், எவருமே தற்பெருமையாக வீரியம் பேசலாகாது. காரியத்தில் ஜெயம் பெறவேண்டியவர்கள், வாயாடாமல் அடக்கமாயிருந்தே வினை செய்யவேண்டும். இவர்க்கு நிச்சயமாக வெற்றி கைகூடும். காரியத்தில் வெற்றியடையாதவர்களேவாய்ப் பறை யடிப்பார்கள். இங்ஙனம் வாயாடிகளா யிருப்போர் எத்தனையோ பேர், காரியத்திற்குதவாமல் திரிவதை நாம் கண் கூடாகக்காண்கின்றோம். இது பற்றியே இன்னும் பெரியோர், "வற்றிய ஓலை கலகலக்கும் எஞ்ஞான்றும் பச்சோலைக் கில்லை ஒலி" என்றும்,

"பணியுமா மென்றும் பெருமை சிறுமை
அணியுமாந் தன்னை வியந்து"

என்றும் கூறியிருக்கின்றனர்.

ஆதலின், ஔவைப் பிராட்டியார் கூறிய இந்நீதியைக் கடைப்பிடித்துக் காரியசித்தியடைய விரும்புவோர் தற்பெருமையாகிய வீரமொழிகளைப் பேசாமல் அடக்கமாயிருந்து காரிய முடித்துக் கனம் பெறுவாராக.

(திருவருட்சகாயம்.)

சிராவக தர்மம்

(முன்தொடர்ச்சி-புத்தகம்-5, சஞ்சிகை-6, பக்கம்-134.)

தேன்:—தேனை அதிக தாராளமாக ஜனங்கள் உபயோகிப்பதாலும், சிலர் பரிசுத்த பரமாத்மனென்று சொல்லிக் கொள்ளும் கடவுளுக்கும் இதை அபிஷேகம் செய்வதாலும், சில ஜைனர்களுங் கூட இதன் தோஷத்தை நன்குணராமல் ஔஷதாதிகளுக்கு உபயோகப் படுத்துவதாலும் இதைப்பற்றிச் சற்று விஸ்தாரமாகச் சொல்ல விரும்புகிறேன்.

தேனை, தேனீக்கள், அநேக லக்ஷக்கணக்கான புஷ்பங்களிலிருந்து சிறு துளிகளாகச் சேர்த்துத் தாமும் உண்ணாமல், அதைத் தம் பிராணனைக் காட்டிலும் அதிக பிரீதியோடு காப்பாற்றிக் கொண்டு வருகின்றன. லோப குணத்திற்குத் தேனீக்கள்தாம் உதாரணமாகச் சாஸ்திரங்களில் சொல்லப்பட் டிருக்கின்றன. ஸாதாரணமாக ஒருவன் ஒரு எருதையோ அல்லது ஒரு ஆபா

ணத்தையோ பிரீதியோடு வைத்துக்கொண் டிருப்பதாக வைத்துக் கொள்வோம். அதை மற்றொருவன் கிரயத்திற்கு வாங்கிக்கொள்ள உத்தேசித்தாலும் கூட அதி பிரீதியோடு வைத்துக் கொண்டிருக்கும் அவனிடம் கிரயத்திற்குக் கேட்டால், அவன் மனதிற்கு என்னகஷ்ட முண்டாகுமோவென்ற பயத்தால் அவனே விற்பதாகச் சொன்னாலொழியக் கேட்கக் கூடாதென்று சொல்வது எல்லோருக்கும் தெரிந்த விஷயமே. இப்படியிருக்க தீவ்ரமாகிய ஆசையில் (லோபத்தில்) பெயர் பெற்றவைகளும், தேனைத் தாமும் சாப்பிடாமல் தம்பிராணனைக் காட்டிலும் அதிக பிரீதியோடு சேகரித்து வைத்திருப்பவைகளுமான தேனீக்களையும், தேன் கூண்டிலிருக்கும் கோடிக்கணக்கான புழுக்களையும் கொன்றும், கூண்டைக் கசக்கிப்பிழிந்து மெடுக்கப்பட்ட தேனை, தயையுள்ள எந்த மனிதன்தான் உபயோகிப்பான்? ஒருதுளி தேனை உபயோகித்தால் ஏழு கிராமங்களை தஹித்தபாபம் ஸம்பவிக்குமென்று சாஸ்திரம் சொல்லுகிறது. ஆகையால் தேனை உபயோகிப்பது அஹிம்ஸா தர்மத்திற்கு விருத்தமானதும், மஹா பாபகரமானதும், அசுசியானதும், நிந்திக்கத் தக்கதுமாகும்.

கள்:—கட்குடியின் கெடுதலும், குடியர்களின் நடத்தையும் தங்களெல்லோருக்கும் தெரிந்த விஷயங்களேயாகிலும் அதைப்பற்றிச் சொல்லியிருக்கும் ஒரு சுலோகத்தைமட்டும் இங்குச் சொல்லுகிறேன்; அதாவது,—

“ஆஸ்தாமேதத்யதிஹ ஜநநீம் வல்லபாம் மந்யமாநா நிந்த்யாஶ்சேஷ்டா
விததி ஜநா: நிஸ்த்ரபா: பீதமத்யா: தந்நாயிக்யம் வபதி நிபதி
தாயஸ்க்ரஸ்ரோதஸோ: ஸமேத்ய வக்த்ரம் ஸ்யோஸ்யோ ஹாஷிணா:
பிபந்தி.”

என்பதாம்.

இதன்படி, கட்குடியர்கள், லஜ்ஜா சூன்யர்களாகி, தம் தாயை மனைவியாக பாவித்தும், மனைவியைத் தாயாக பாவித்தும் நிந்திக்கத்தக்க சேஷ்டைகளைச் செய்வார்கள். அன்றியும் சில ஸமயங்களில் அதிக குடியின் வெறியால் மயங்கி, ரோட்டோரத்தில் விழுந்து கிடந்து அவ்வழியாக ஓடும் நாய்கள், தங்கள் வாய்க்கு நேராக மூத்திரத்தை விட அதை மதுர மதுர மென்று சொல்லிக் கொண்டு குடித்தலும் செய்வார்கள். ஆதலின், இவ்வளவு துராசாரமானதும், ஞானத்தைப் போக்கடிப்பதுமான கள்ளை அவசியம் நீக்கவேண்டும்.

மாம்ஸம்:—மாம்ஸத்தின் நிஷித்தம் பிரஸித்தமானதே. இது, ரக்தம், சீழ், கிருமிகள் முதலானவைகளையுடையதும், தாமஸ குணத்தை யுண்டுபண்ணக் கூடியதுமாகும். ஒரு பிராணியைக்கொன்று இதை எடுக்கவேண்டு மாதலால் தயையுள்ள எந்த மனிதனும் இதை ஸ்வீகரிக்கமாட்டான். இதை நீக்கியிருப்பவர்களின் பெருமையைப் பற்றி,

“கொல்லான் புலாலை மறுத்தானைக் கைகூப்பி
எல்லா வுயிருந் தொழும்”

என்று குருளாசிரியர் கூறியுள்ளார். மேலும் மாம்ஸாஹாரம் துஷ்ட பிராணிகளாகிய ஸிம்ஹம், புலி, முதலான மிருகங்களுக்கு ஏற்றவை. அதனுல் இதா ஜீவன்களைக் கொல்லவும் கிழிக்கவும் உபயோகப்படக்கூடிய கூர்மையான நகங்களும் கோரப்பற்களும் அவைகளுக்கு இயற்கையாக அமைந்திருக்கின்றன. அவைகள் கேவலம் மாம்ஸாஹாரத்தால் ஜீவிப்பவை. மனிதனின் இயற்கை அப்படிக்கல்ல. இவன் சாகபக்ஷணி. ஆகையால், இவனுக்கு மாம்ஸாஹாரம் ஏற்றதல்ல. இதைப்பற்றி ஆங்கிலேய வைத்ய நிபுணர்களும் கூட மாம்ஸாஹாரம் மனிதனுக்குக் கெடுதியையும் தாமஸ குணத்தையும் உண்டு பண்ணுமென்றும், அதை உபயோகிக்கவே கூடாதென்றும் சொல்லி யிருக்கிறார்கள். ஸத்வ குணத்தையபேக்ஷிக்கும் மனிதர்கள் ஸத்வாஹாரமாகிய தான்ய வகைகள், நெய், பால், தயிர் முதலான ஆஹாரங்களை உபயோகிக்க வேண்டுமே யொழிய மாம்ஸம், கள், சாராயம முதலான தாமஸாஹாரங்களை உபயோகித்து தாமஸ குண பிராணிகளாகிய ஸிம்ஹம், புலி முதலான குரூர பிராணிகளின் ஸ்வபாவத்தை அடையாம லிருக்கவேண்டும்.

பஞ்ச ஔதும்பரம்:—பாலுள்ள மரங்களின் காய்களில் எப்போதும் ஜீவோத்பத்தி அதிக மாகையால், அத்திக்காய், ஆலங்காய், அரசங்காய், இளிக்காய், கல்லாலங்காய், இவைகளையும், இவைகளின் பழங்களையும் உபயோகிக்கக் கூடாது.

"மாம்ஸாஸிஷு தயா நாஸ்தி நஸத்யம் மத்யபாயிஷு
தர்மபாவோ நஜீவேஷு மதூதும்பர ஸேவிஷு"

என்ற சுலோகத்தில் மாம்ஸபுக்தம் செய்பவனிடம் தயையும், கட்குடியர்களிடம் ஸத்யமும், பஞ்சௌதும்பரம் தின்பவனிடம் தர்ம சிந்தனையும் கிடையாவென்று சொல்லப்பட் டிருக்கிறது.

அணுவிரதம்:—கொலை, பொய், களவு, காமம், பரிக்கிரஹம் என்னும் ஐந்தையும் ஸம்பூர்ணமாக நீக்குவது மஹாவிரதம்; ஏகதேசத்தில் நீக்குவது அணுவிரதம். கிரஹஸ்தர்களால் முழுதும் நீக்கமுடியாதாகையால் அவர்கட்கு அணு விரதம் சொல்லப்பட்டது.

"பெரிய கொலைபொய் களவொடு காமம்
பொருளை வரைதலோ டைந்து"

என்று அருங்கலச் செப்பிலும் இவ்விரதம் சொல்லப்பட் டிருக்கிறது.

கொலை:—ஒரு ஜீவனைக்கொல்வதைப் போலவே, கட்டிப்போடுதல், வதைசெய்தல், அங்கச்சேதம் செய்தல், அதிக பாரத்தைச் சுமக்கும்படிச் செய்தல், அதற்கு அன்னபானங்களைத் தடைசெய்தல் முதலானவைகளும் அக்கொலைக்கு ஸமானமான குற்றங்களேயாகும். ஹிம்ஸையைப்பற்றி நிச்சய நயத்தில் நோக்கும்போது ஒரு ஜீவனின் ஸ்வபாவ குணமாகிய சுத்த பரிணமத்தை, கர்மஜனிதங்களாகிய, ராக, த்வேஷ, க்ரோத, மான, மாயா, லோப, மோஹ, மத, முதலான கெட்ட பரிணாமங்கள் காதம் பண்ணுகின்றன. அதா

வது கொலை செய்கின்றன. இதுதான் முதல் ஹிம்ஸை. யார் நிமித்தமாகக் குரோத முதலான விகாரங்கள் உண்டாகின்றனவோ, அவர்களைத் திட்டுதல், அடித்தல், பங்கித்தல், கொல்லுதல் முதலான கார்யங்கள் இரண்டாவது ஹிம் சையாகும். இரண்டாவது ஹிம்ஸைக்கு உட்படுதல் அவர்களின் கர்மத்தைப் பொறுத்திருக்கிறது. சில ஸமயம் உட்படாமலு மிருக்கலாம். ஒரு கோபி, தன் கையால் நெருப்பை எடுத்து எதிரியின் மீது வீசி யடிக்கும்போது அந்த நெருப்பு எதிரியின்மேல் பட்டாலும் படும்; அல்லது படாமலிருந்தாலு மிருக்கும்; ஆனல், கோபியின் கை கொளுத்தப்படுவது நிச்சயம். இதைப் போலவே ராகத்வேஷாதி பரிணாமங்களால் ஆத்மன் ஹிம்ஸைக்கு உட்படுவது கவனிக்கத் தக்கது.

பொய்:—பிறர்க்குத் தீங்கு விளைவிக்கும் சொல் எதுவோ அது பொய் யாகும். எவர்க்கும் எக்காலத்தும் எவ்விதமான தீங்கையும் உண்டுபண்ணாத சொல் எதுவோ அது ஸத்ய வசனமாகும். குறளாசிரியரும் "வாய்மை எனப் படுவ தியாதெனில் யாதொன்றும், தீமையி லாத சொலல்" என்று கூறியுள் ளார். அஸத்தியத்தை ஸத்யமெனலும், மித்யாசாஸ்திரங்களை உபதேசிப்பதும், ஒருவரின் ரஹஸ்யத்தை வெளிப்படுத்துவதும் தப்புக் கையெழுத்துப் போடு தலும், பொய்ச்சாக்ஷி சொல்லுதலும் பொய்யேயாகும். ஆனல் சில ஸமயங் களில் சொல்லும் அஸத்யமும் நன்மையைப் பயக்குமாகில் ஸத்தியத்தின் தன் மையை யடைகிறது.

"பொய்ம்மையும் வாய்மை யிடத்த புரைதீர்ந்த,
நன்மை பயக்கு மெனின்"

என்று குறள் கூறுகின்றது. மேலும்,

"வ்யவதத்யஜேயதோ தோஷாஹிம்ஸாரம்ப பயாதய:
ஸத்யமேவ நவக்தவ்யம் தத்வ: ஸத்யம்ருதாவிவி:—"

என்ற சுலோகமும் "ஹிம்ஸை, பயம் முதலான தோஷங்களை உண்டு பண்ணு கிற ஸத்யவசனங்கள் உண்மையின் லக்ஷணத்தை யறிந்தவர்களால் சொல்லத் தக்கவையல்ல" என்று சொல்லுகிறது. இதற்குதாரணம்:—ஒரு பாம்பைக் கொல்வதற்கு ஒருவன் துரத்திக்கொண்டு வருகிறன். அந்தப்பாம்பு ஒரு வளை யில் ஒளித்துக் கொண்டது. அதைநாம் பார்த்திருந்தோம். துரத்திக் கொண்டு வந்தவன் பாம்பு எங்குப் போயிற்றென்று நம்மைக்கேட்டால் நாம், அது இரு க்குமிடத்தைச் சொல்லாமல் வேறு வழியைக் காட்டி, இவ்வழி போய்விட்ட தென்று சொல்லவேண்டும். உண்மையைச் சொன்னல் உடனே அவன் அதைக் கொன்றுவிடுவான். அந்தக் கொலைக்கு நாம் பாத்ராக வேண்டும். இம்மாதிரி நன்மையைப் பயக்கும் ஸமயங்களில் அவசியம் பொய் சொல்வதால் மிக்க நன்மையுண்டு. எந்தப் பொய்யினல் யாருக்கும் தீமையில்லாமல் நன் மையே யுண்டாகுமோ அது ஸத்யத்துக்கு ஸமமான தாகும்.

களவு:—பிறர் பொருளை அபகரிப்பதும், ஒருவர் மறந்து வைத்துவிட்டுப் போனபொருளை எடுத்துக் கொள்வதும், திருட்டுச் சொத்துக்களை வாங்குவதும், அரசன் கட்டளைக்கு மாறாகத் திராசுபடிக்கல், அளவுகோல் முதலானவைகளை வைத்துக்கொள்வதும், பெரியபடி முதலானவைகளால் வாங்கிச் சின்னப்படி முதலானவைகளால் விற்பதும், நெய்யில் எண்ணெய் முதலானவைகளைக் கலந்து விற்பதும், இன்னும் இவைபோல்வனபிறவும் திருட்டேயாகும். பொய்யைப் போலவே திருட்டிலும் அனுகூலமான திருட்டுமுண்டு. எப்படியெனில், ஒருவன் தற்கொலைசெய்துகொள்வதற்காகவோ அல்லது பிறரைக் கொல்வதற்காகவோ விஷத்தை வைத்துக்கொண்டிருப்பதாக வைத்துக் கொள்வோம். அதை நாம் எடுத்துக்கொள்வதால் நன்மையேயொழியத் தீமையில்லை. ஆகையால் பிறருக்கு அனு கூலம் உண்டாகக்கூடிய திருட்டு நன்மையையே பயக்கும்.

காமம்:—கிரஹஸ்தர்களுக்கு ஸ்வதார ஸந்தோஷமட்டும் குற்றமுடையதல்ல. வேஸ்யாகமனம், பரதாரகமனம், முதலானவைகளும், அனங்கக் கிரீடை, காமத்தில் தீவ்ர சிந்தனை முதலானவைகளும் பாபமாகும்.

பரிக்கிரஹம்:—ஒரு வஸ்துவினிடமுள்ள மோஹமே பரிக்கிரஹமாகும். இந்தப் பரிக்கிரஹம், பாஹ்ய, அப்யந்தரமென இருவகைப்படும். பாஹ்ய பரிக்கிரஹமாவது: வீடு, நிலம், பொருள், புத்ர, மித்ர, களத்ராதி பந்துவர்க்கங்கள் முதலானவைகளிலுள்ள மோஹம். அப்யந்தர பரிக்கிரஹமாவது: ராகத்வேஷாதி பரிணாமங்கள். இந்த உபய பரிக்கிரஹங்களாலும் ஸதா கர்மபந்த மேற்படுவதால் இவைகளைக் கூடுமான வரையில் ஒரு அளவிற்குட்படுத்தி அதற்கு மீறாமலிருக்கும்படி செய்வது பரிக்கிரஹ நிவர்த்தியாகும்.

நமக்கு விதித்துள்ள கட்டளையாகிய இந்த ஐந்து அணுவிரதங்களையும் நாம் காப்பாற்றினால் கொலைக்குற்றம், நம்பிக்கைத்துரோகம், திருட்டு, கொள்ளை முதலானவைகளுக்காக அரசனாலேற்படும் தண்டனைகளுக்கு உட்படாதிருப்பதும் தவிர, இது புண்யத்திற்கும் காரணமாகும்.

குணவிரதம் மூன்று:—திக்விரதம், அனர்த்த தண்டவிரதம், போகோபபோக பரிமாணவிரதம் என்னும் மூன்றும் குணவிரதமாம். குணவிரதமென்பது ஜீவனின் நல்ல குணங்களைப் பெருக்குவதற்கும், பாபத்தில் பிரவேசிக்காமல் ஜீவனைத் தடுப்பதற்கும் அனுகூலமாகவிருக்கிறது.

திக் விரதம்:—ஜனங்களின் மோஹமானது எல்லாத் திக்குகளிலும் வியாபித்து ஒவ்வொரு திக்குகளிலுமுள்ள ஸமஸ்தசேதனம் அசேதனமாகிய ஸமஸ்த பதார்த்தங்களையும் அபேக்ஷிப்பதால் அந்த மோஹத்தை யடக்குவதற்கு ஸாதகமாக திக்விரதம் ஏற்பட்டிருக்கிறது. அதாவது ஒருவன், தான் விரதம் பண்ணின திக்குகளிலுள்ள எந்த வஸ்துவையும் உபயோகிப்பதில்லை என்றும் அந்தத் திக்கிலுள்ள மனிதர்களின் ஸம்பந்தத்தை எவ்விதத்திலும் வைத்துக் கொள்வதில்லை என்றும் திடமாகப் பிரதிக்ஞை செய்து கொள்வதாகும்.

அனர்த்த தண்ட விரதம்:--பிரயோஜன மின்றித் தண்டனைக் குட்படு தல், அதாவது: பாபத்துக் காளாகுதலினின்றும் நீங்குதல் அனர்த்த தண்ட விரதமாகும். கெட்ட விஷயங்களைக் கேட்டலும், பிறர்க்கு உரைத்தலும், பாபகார்யங்களைச் செய்யும்படி பிறர்க்குபதேசித்தலும், பரிக்கிரஹங்களில் அதிக மதத்தையடைவதும், ஆயுத முதலானவைகளைத் தானமாகவோ இரவலாகவோ பிறர்க்குக் கொடுப்பதும், இன்னும் இவைபோல்வனபிறவும், ஒருவனுக்குப் பிரயோஜன மின்றிப் பாபத்தைக் கொடுக்கக் கூடியவைகள். அனர்த்த தண்டமாகும் இவைகளில் நீங்கி இருக்கவேண்டும்.

போகோப போக பரிமாண விரதம்:—போக உபபோக வஸ்துக்களை ஒரு அளவிற் குட்படுத்துதல் போகோப போக பரிமாண விரதமாகும். போகமென்றால் ஒருதடவை யுபயோகித்துக் கழிப்பதாகிய ஆஹாரம், புஷ்பம், சந்தனம், தாம்பூல முதலான போக வஸ்துக்கள். உபபோகமென்றால் திரும்பத் திரும்ப அனுபவிப்பனவாகிய கட்டில், மெத்தை, வண்டி, வாஹனம், ஸ்திரீ, திரம், ஆபரணம் முதலானவைகளாகும். இவற்றை,

"துய்ப்பன போக முபபோகம்
துய்ப்பாம் பெயர்த்து மெனல்"

என்பதால் உணர்க.

இந்தப் போகோப போக வஸ்துக்களை ஒரு அளவில் வைத்துக் கொள்வதென்றும், அதற் கதிகமாக வைத்துக்கொள்வ தில்லையென்றும் விரதம் பண்ணிக் கொள்ளவேண்டும். அதாவது: அவரவர்களின் அந்தஸ்திற்குத் தக்கபடி காலதேச வர்த்தமானங்களை அனுசரித்து, வீடு, நிலம், பசு, எருது, வண்டி, வஸ்திரம், நகை, பொருள் முதலானவைகளை இவ்வளவுதான் வைத்துக் கொள்வதென்று வரையறுத்துக் கொள்ளவேண்டும். இந்தவிரதம் ஆசரிப்பதால் ஸம்ஸார துக்கங்களுக்கு மூலகாரணமாகிய அவா அதிகரிக்காம லிருக்கிறது. ஒருகுழி நிலமேனு மில்லாதவன் 50 காணி போதுமென்றும், குந்தக் குடிசையற்றவன் 10 மெத்தைவீடுகள் போதுமென்றும், கட்டக்கந்தையற்றவன் 100 வஸ்திரங்கள் போதுமென்றும், கையில் காசில்லாதவன் லக்ஷரூபாய் போதுமென்றும், இவற்றிற் கதிகமாக வைத்துக் கொள்வதில்லை என்றும் விரதம் பண்ணிக் கொள்வது யுக்தமாகாது.

சிக்ஷா விரதம்:—தேசவிரதம், ஸாமாயிகம், ப்ரோஷதோபவாஸம், வையாவ்ருத்யம் அல்லது அதிதிஸம்விபாகம் என சிக்ஷாவிரதம் நான்காகும். இவைகளால் தான் செய்த பாபங்களுக்குச் சிக்ஷையேற்படுவதால் அதாவது பாபங்கள் கழிவதால் இவைகட்குச் சிக்ஷாவிரதமென்று பெயர் ஏற்பட்டது.

தேச விரதம்:—தானிருக்கும் தேசம் தவிர வேறு எந்தத் தேசத்தினுடைய ஸம்பந்தத்தையும் எவ்வித காரணத்தை முன்னிட்டும் வைத்துக்கொள்வதில்லை என்றும், இதர தேச வஸ்துக்களை உபயோகிப்பதில்லை யென்றும், இதர தேச ஜனங்களின் ஸம்பந்தத்தையும் வைத்துக்கொள்வதில்லை யென்றும் இதர தேசங்களுக்குச் செல்வதில்லை யென்றும் விரதம் பண்ணிக்கொள்வது

தேச விரதமாகும். இதனால் ஸ்வதேசத்தில் (தான் விரதம் பண்ணிக்கொண்ட தேசத்தில்) உற்பத்தியாகும் வஸ்துக்களையே உபயோகிப்பதென்பதும், ஸ்வ தேச ஜனங்களிடமாம்பந்தமட்டும் வைத்துக்கொள்வதென்பதும், அன்ய தேசங்களுக்குச் செல்வதில்லையென்பது மேற்படுகின்றன. இந்த விரதத்தினால் திக் விரதத்திற் கழிவதைக் காட்டிலும் ஜனங்களின் அவா பெரும்பாகம் கழிவு படுவதால் பாபங்கள் குறைந்து புண்யம் விருத்தி யடைகிறது.

ஸாமாயிகம்:—ஸாமாயிகமென்பது ஸந்தியா ஸமயங்களில் கிரஹஸ்தர்களால் செய்யப்படும் தர்மத்தியானமாகும். அந்தக் காலங்களில் எவ்வித பரிக்கிரஹங்களும் மனதிலில்லாமையாலும், சுபபரிணாமத்தில் வர்த்திப்பதாலும் வஸ்திரத்தோடு கூடிய முனித்தன்மையை கிரஹஸ்தன் அடைகிறான். அதாவது: வஸ்திரம் ஒன்று நீங்கலாக மற்றெல்லா விஷயங்களிலும் யதிக்கு மிவனுக்கும் பேதமில்லை. அந்த ஸமயம் ஸங்கல்ப விகல்பங்களைவிட்டு உலகத்திலுள்ள ஸமஸ்த பிராணிகளும் ஸமத்வமென்ற ஸமதா சித்தத்தைப் பெற்றூராகத் வேஷங்களை விட்டு அனித்ய முதலான பன்னிரண்டு அனுப்ரேக்ஷைகளையும், உத்தமக்ஷமை முதலான பத்துத் தர்மங்களையும், ஆஞ்யாவிசய முதலான நான்கு தர்ம தியானங்களையும், தர்சனவிசுத்தி முதலான ஷோடச பாவனைகளையும், அரஹந்தர் முதலான பஞ்ச பரமேஷ்டிகளின் ஸ்வரூபங்களையும் சிந்திக்கத் தக்கது.

ப்ரோஷதோபவாஸம் :—பஞ்சேந்திரியங்களை ஜெயிப்பதற்கும், கஷாயங்களை நீக்குவதற்கும், நித்ரை ஆலசியங்களைப் போக்குவதற்கும், மனது ஏகாக்ரத் தன்மையை அடைவதற்கும் இந்த உபவாஸவிரதம் மிக்க அனுகூலத்தை உண்டுபண்ணுகிறது. இதை ஆசரிக்கவேண்டிய கிரமமாவது:

“கஷாயவிஷயாஹாரத்யாகோயத்ரவிதீயதே
உபவாஸஸவிஜ்ஞேய: ஶேஷம்லங்கநகம்விது:”

என்றபடி குரோத, மான, மாயா, லோபமென்னும் நான்கு கஷாயங்களையும், மெய், வாய், கண், மூக்கு, செவி என்னும் ஐந்து இந்திரிய விஷயங்களையும், உண்பன, தின்பன, நக்குவன, பருகுவன என்னும் நான்கு ஆஹாரங்களையும் நீக்கி இருப்பதே உபவாஸமாகும். கேவலம் ஆஹாரம் ஒன்றைமட்டும் நீக்கியிருப்பது பட்டினியேயாகும். அது உபவாஸ மாகமாட்டாது. ப்ரோஷதோபவாஸமென்பது-முதல்நாள் பகல் 12 மணிக்குள் ஆஹாரம் கைக்கொண்டு மூன்றாநாள் பகல் 12 மணிவரையிலும் அதாவது 48 மணிநேரம் ஆஹார முதலானவைகளை வர்ஜிதம் செய்திருப்பது உத்தம உபவாஸமாகும். 36 மணிநேரம் ஆசரிப்பது அதாவது முதல்நாள் மாலை 6 மணிக்குமேல் கைக்கொள்வது மத்திம உபவாஸமாகும். இந்த உபவாஸ விரதத்தால் பாபகர்மங்கள் க்ஷயமடைந்து புண்யம் அபிவிருத்தி யடைவதல்லாமல் புத்தி தீக்ஷண்யமும், நேத்திர பிரகாசமும், அநேக வியாதிகளின் உபசமனமும் ஏற்படுகின்றன.

வையாவ்ருத்யம்:—இது, அதிதிஸம்விபாகமென்றும் சொல்லப்படும்; அதாவது, ஸத்பாத்திரங்களுக்கு ஆஹார, அபய, பைஷஜ்ய, சாஸ்திரமென்னும்

நான்குவித தானத்தைச் செய்வதாகும். இதனால் கிரஹஸ்த தர்மத்திலேற்படும் பாபம் நாசமடைகிறது.

> "மனைவாழ்க்கை யால்வந்த பாவந் துடைத்தல்
> மனை நீத்தார்க் கீந்த கொடை"

என்று இந்தத் தானவிசேஷம் சொல்லப்பட்டிருக்கிறது. இந்த நான்கு தானங்களின் பலன் என்னவெனில்,

> "ஜ்ஞாநவாந் ஜ்ஞாநதாநேந நிர்பயோ அபயதாநத:
> அந்நதாநாத் ஸுகீ நித்யம் நிர்வ்யாதிர் பேஷஜாத் பவேத்"

என்றபடி ஒருவன் ஞானதானத்தால் ஞானியாகவும், அபயதானத்தால் பயமில்லாதவனாகவும், அன்னதானத்தால் ஸுகியாகவும், ஔஷத தானத்தால் வியாதி ரஹிதனாகவு மாகிறான்.

ஸத்பாத்ரங்களுக்கு இந்த நான்குவித தானத்தைச் செய்வதால்தான் விசேஷ புண்யமேற்படும். அதே தானத்தை குபாத்ரங்களுக்குச் செய்வதால் புண்யலாபம் கிடைக்காததுந் தவிர பாபமே விருத்தியாகும். எப்படி ஒரே கிணற்று ஜலத்தைக் கரும்புக்கும் வேம்புக்கும் பாய்ச்சுவதால் அது முறையே தித்திப்பும் கசப்புமாகிய ரஸத்தைக் கொடுக்கிறதோ, அத்தன்மைபோல் பாத்ராபாத்ர தானங்களும் பலனைக் கொடுக்கும்.

> "ஸத்பாத்ரதாநேந பவேத்தநாட்யோ
> தநப்ரபாவேந கரோதி புண்யம்
> புண்யப்ரபாவாத் த்ரிதிவம் ப்ரயாதி
> புநர்தநாட்யோ புநரேவ போகீ"

என்றபடி ஸத்பாத்ரங்களுக்குத் தானம்செய்த பலத்தால் ஒருவன் தனவானாகிறான்; தனவிருத்தியால் புண்யத்தைச் செய்கிறான்; புண்ய மிகுதியால் தேவனாய்ப் பிறக்கிறான்; பிறகு அங்கு நின்றும் தனவானாகப் பிறந்து விசேஷ போகோப போகங்களை அனுபவிக்கிறான்.

> "அபாத்ரதாநேந பவேத்தரித்ரீ
> தாரித்ர்யதோஷேண கரோதி பாபம்
> பாபப்ரபாவாந் நரகம் ப்ரயாதி
> புநர்தரித்ரீ புநரேவ பாபீ"

என்றபடி அபாத்ரங்களுக்குத் தானம் பண்ணுவதால் ஒருவன் தரித்திரனாகிறான்; தரித்திரத்தின் கொடுமையால் பாபத்தைச் செய்கிறான்; பாபமிகுதியால் அவசியம் நரகத்தையடைந்து மறுபடியும் அங்கு நின்றும் தரித்திரனாகப் பிறந்து பாபியாகவே இருப்பான்.

இந்த நான்கு தானங்களில் எத்தெந்த ஸமயங்களில் எந்தெந்த தானங்களுக்கு அவசிய மேற்படுகிறதோ அந்தந்த ஸமயங்களில் அந்தந்த தானங்கள் முக்கியமானவையாகக் கருதப்படுகின்றன. ஆயினும் இந்த நான்கு தானங்களில் ஞானதானமே அதி சிலாக்ய மானதென்று சொல்லப்பட்டிருக்கிறது. ஆஹாரதானத்தால் அந்தஸமயம் பசியைத்தடுக்கலாம்; அபயதானத்தால் அந்தஸமயம் எற்படும் பயத்தை நீக்கலாம்; ஔஷததானத்தால் அந்த ஸமயம் எற்படும் வியாதியைப் போக்கலாம். ஆனால், ஞானதானமானது அநேக பவங்களாக பந்தித்துள்ள அஞ்ஞான அந்தகாரத்தைப் போக்கி ஸுஞ்ஞானத்தைக் கொடுத்து லௌகிக பாரமார்த்திக ஸுகங்களை அனுபவிப்பதற்கு ஸாதகமாக விருக்கிறது.

புத்திமான்களே!

இந்த ஸமயம் மற்ற மூன்றுதானங்களைக் காட்டிலும் ஞானதானத்தின் அவசியம் அதிக மிருப்பதால் தாங்கள் இது விஷயத்தில் சற்று கவனஞ்செலுத்தி இதை விருத்தி செய்யும் விஷயத்தில் முயற்சிக்க வேண்டுமாய்த் தங்களைப் பிரார்த்தித்துக் கொள்கிறேன்.

சிலர் தானங்களில் கோதானம், பூதானம், ஸ்வர்ணதானம், கன்யாதானம் முதலான தானங்கள் சிலாக்கியமென்று சொல்லுகிறார்கள். ஆனால் இவைகள் ஸம்ஸாரத்தை அபிவிருத்தி செய்யக்கூடியவை யாதலால் கெட்டதானங்களென்று சொல்லப்பட்டிருக்கின்றன.

ராத்ரிபுக்ததியாகம்:—இது, இரவில் புஜிப்பதில்லை என்று விரதம் செய்துகொள்வதாகும். சூரிய வெளிச்சத்தில் ஸூக்ஷ்ம ஜீவன்கள் காணப்படுவதுபோல் இரவில் எத்தனை எலெக்ட்ரிக் விளக்குகள் போட்டுக்கொண்டாலும் காண்பதில்லை. அப்படித் தென்படாமையால் ஆஹார கவளங்களோடு அநேக ஜீவன்களையும் சேர்த்துப் புஜிக்க வேண்டியிருக்கிறது. அதனால் பாபம் விருத்தியாவதுமன்றி அநேக வியாதிகளும் ஸம்பவிக்கின்றன. எறும்பு புத்தியைக் கெடுக்கிறது; ஈ வாந்தியையும், மயிர் அஜீர்ணத்தையும், உமி தொண்டை வியாதியையும், பாசை குஷ்டநோயையும் உண்டு பண்ணுகின்றன. இப்படி அநேக வஸ்துக்கள் ஆஹாரத்தோடு கலந்து அநேக வியாதிகளை உண்டாக்குவதுமன்றி கிரஹஸ்தர்களுக்கு மூலவிரதமாகிய அஹிம்ஸா விரதத்திற்கும் நேர் விரோதமாக விருக்கின்றன.

"சூக்ஷ்மாகித்வா நஹோஜநம்" என்றபடி உண்பதையும், குடிப்பதையும் நன்றாகப் பரிசோதித்துக் கொள்ளவேண்டு மாகையாலும், இரவில் அது ஸாத்யமின்மையாலும், நாம் உட்கொள்ளும்போது சங்கை யேற்படுகிறது. அப்படிச் சங்கையோடு உட்கொள்ளும் ஆஹாரம் நன்றாக ஜீர்ணிக்காததோடு அநேக வியாதிகளையும் உண்டு பண்ணுகிறது. மேலும் எப்படித் தாமரைப்பூ சூரியனிருக்கும்போது விகஸிதமாகவும் அஸ்தமனத்தில் ஸங்கோசமாகவு மிருக்கிறதோ அப்படியே நமது ஹிருதய நாபிக்கமலங்கள் இரவில் ஸங்கோசத்தை யடைகின்றன. அந்த ஸமயம் உட்கொள்ளும் ஆஹாரம் வியாதியையே யுண்டுபண்ணும்.

இதைப்பற்றி மேல்நாட்டு வைத்ய நிபுணர்களும் ஒப்புக்கொண் டிருக்கிறார்கள். இவ்வளவு தோஷங்களுக்குக் காரணமாகிய ராத்ரிபுக்தத்தை எல்லோரும் நீக்கு வது அவசியமேயாகும்.

ஜலகாலநம்:—இது, ஜலத்தை வடிகட்டி யுபயோகிப்பது. ஜலத்தை வடிகட்டுவதால் ஜலத்திலுள்ள அநேக ஸ்தூல ஜீவன்களும், இதர அசுத்த பதார்த்தங்களும் நீங்கிவிடுகின்றன. வடிகட்டும் வஸ்திரம் சுத்தமானதாகவும், போதிய அகல நீள முள்ளதாகவும், சித்ரமில்லாததாகவும், அழுத்தமானதாகவு மிருக்கவேண்டும். மற்றும்,

“𑌮𑍁𑌹𑍂𑌰𑍍𑌤𑌂 𑌗𑌾𑌲𑌿𑌤𑌂 𑌤𑍋𑌯𑌂 𑌪𑍍𑌰𑌾𑌸𑍁𑌕𑌂 𑌪𑍍𑌰𑌹𑌰
𑌦𑍍𑌵𑌯𑌂— 𑌉𑌷𑍍𑌣𑍋𑌦𑌕𑌮𑌹𑍋𑌰𑌾𑌤𑍍𑌰𑌂 𑌪𑍍𑌶𑍍𑌚𑌾𑌤𑍍𑌸𑌂𑌮𑍂𑌰𑍍𑌛𑌨𑌂 𑌭𑌵𑍇𑌤𑍍”

என்றபடி வடிகட்டின ஜலத்தில் ஒரு முகூர்த்தத்திற்கு மேலும், திருமஞ்சனம் முதலான வாஸனை திரவியங்களைப் போட்டுவைக்கும் பிராஸுக ஜலத்தில் 15 நாழிகைக்கு மேலும், நன்றாகக்காய்ச்சின ஜலத்தில் 60 நாழிகைக்கு மேலும் ஸம்மூர்ச்சன ஜீவன்கள் உண்டாகின்றன. ஆகையால், வடிகட்டின ஜலத்தை ஒரு முகூர்த்தம் வரையில்தான் உபயோகிக்கலாம். அதற்குமேல் கூடாது.

மௌநம்:—மல மூத்ரங்களை விடும்போதும், ஸ்நானம், ஜபம், பூஜை முதலியவற்றைச் செய்யும்போதும், ஆஹாரம் கொள்ளும்போதும், சங்கமத் தின்போதும் மௌனமாக விருக்கவேண்டும்..

ஸத்புருஷர்களே!

இது வரையில் சொல்லிக்கொண்டு வந்த மூல குணம் 8, அணுவிரதம் 5, குண விரதம் 3, சிக்ஷாவிரதம் 4, ராத்ரிபுக்தத்தியாகம், ஜலகாலனம், மௌநம் முதலான விரதங்களை கிரஹஸ்தர்கள் ஆசரிப்பதும் தவிர ஆர்யஷட் கர்மங்களையும் தினப்படி செய்யவேண்டும். அவையாவன:—

“𑌦𑍇𑌵𑌪𑍂𑌜𑌾 𑌗𑍁𑌰𑍂𑌪𑌾𑌸𑍍𑌤𑌿 𑌸𑍍𑌵𑌾𑌧𑍍𑌯𑌾𑌯𑌸𑍍𑌸𑌂𑌯𑌮𑌸𑍍𑌤𑌪𑌃
𑌦𑌾𑌨𑌂𑌚𑍇𑌤𑌿 𑌗𑍃𑌹𑌸𑍍𑌥𑌾𑌨𑌾𑌂 𑌷𑌟𑍍𑌕𑌰𑍍𑌮𑌾𑌣𑌿 𑌦𑌿𑌨𑍇𑌦𑌿𑌨𑍇”

என்றபடி முன்சொல்லியுள்ள லக்ஷணங்களோடு கூடிய கடவுளையும் குருவையும் பூஜித்தலும், ஆத்ம ஹிதமான சாஸ்திரங்களை அப்யஸித்தலும், பிராணி ஸம்யமம் விஷய ஸம்யமம் என 12 விதமான ஸம்யமத்தைக் கைக்கொள்வதும், அஷ்டமி சதுர்த்தசிகளில் உபவாஸம் அல்லது ஏகபுக்தம் கைக்கொள்ளும் தபஸும், உத்தம பாத்ரங்களுக்குச் சதுர்விததானமும் கிரஹஸ்தர்களால் தினப்படி செய்யத்தக்க கார்யங்களாகும்.

இதுவரையில் சொன்ன விரதசீலங்களை ஆசரிக்கும் கிரஹஸ்தர்கள், குணத்தின் ஏற்றத் தாழ்வுகளை அனுசரித்து, தர்சனீகன் முதலான 11 பேதங்களாகப் பிரிக்கப்பட்டிருக்கிறார்கள். இச்சமயம் அதிக நேரமாய் விட்டபடியாலும், தாங்கள் எனக்குக் கொடுத்த நேரத்தைக் காட்டிலும் அதிக ஸமயத்தை நான் ஆக்ரமித்துக்கொண் டிருப்பதாலும், 11 நிலை சிராவகர்களின் விவரத்தை பிந்தி ஸமயம் வாய்க்கும்போது சொல்லுகிறேன்.

" 𑌸𑌰𑍍𑌵𑌮𑌂𑌗𑌲𑌮𑌾𑌂𑌗𑌲𑍍𑌯𑌂 𑌸𑌰𑍍𑌵𑌕𑌲𑍍𑌯𑌾𑌣𑌕𑌾𑌰𑌕𑌂
𑌪𑍍𑌰𑌧𑌾𑌨𑌂 𑌸𑌰𑍍𑌵𑌧𑌰𑍍𑌮𑌾𑌣𑌾𑌂 𑌜𑍈𑌨𑌂 𑌜𑌯𑌤𑍁 𑌶𑌾𑌸𑌨𑌂 "

என்றபடி எல்லா மங்களத்திற்கும் முக்கிய மங்களகரமானதும், எல்லாக் கல்யாணங்களையும் உண்டுபண்ணக் கூடியதும், எல்லாத் தர்மங்களுக்கும் பிரதானமானதுமான ஜைன சாஸநமானது ஸர்வோத்கிருஷ்டமாக விளங்கட்டுமென்று ஸ்ரீ ஜிநேச்வரனைப் பிரார்த்தித்து எனது பாஷணத்தை நிறுத்திக் கொள்கிறேன்.

குணக்ராஹிகளே !

இதுவரையில் நான் சொல்லிக்கொண்டு வந்தவற்றைச் சில விடங்களில் அதிவிஸ்தாரமாகவும், சில விடங்களில் சுருக்கமாகவும் கூறியுள்ளேன். எனது அஞ்ஞானவசத்தினலும், பிரமாத வசத்தினலும் இவற்றில் மலிந்துள்ள தூற்றங்களை நீக்கிக் குணத்தை ஸ்வீகரிக்கவேண்டுமென்று மறுபடியும் தங்களைப் பிரார்த்திக்கிறேன்.

ஓம் சாந்தி.

ஜைனமகா சபை.
காஞ்சீபுரம்.

பாலபோத விளக்கம்.

(முன்தொடர்ச்சி-புத்தகம்-5, சஞ்சிகை-6, பக்கம்-136.)

87. வியாபாரம் செய்யுங்காலத்தில் சரக்குகளில் போலிச் சரக்குகளைச் சேர்த்து விற்கலாகாது; நெல், மற்ற தானியங்கள் ஆகியவற்றில் கல், மண் முதலியவற்றைச் சேர்த்து மோசஞ் செய்யலாகாது. இவ்வாறு செய்தால் கடவுள் கெடுத்துவிடுவார். அதிக இலாபம் சம்பாதிக்கக் கருதியதற்கு நேர்மாற்றமாக நஷ்டத்தையே அடைய ஏதுவுண்டாகும். பலரும் பழிப்பார்கள்.

88. வியாபாரச் சரக்குகளை ஒருவர்க்கொரு விலையாகவும், மற்றொருவர்க்கு வேறொரு விலையாகவும் விற்கலாகாது. எல்லோருக்கும் சமத்துவமாக எப்பொழுதும் ஒரேவிலை கூறி விற்கவேண்டும். சாதுக்களை வியாபாரத்தில் ஏமாற்ற நினைத்தால், வியாபாரமே கெட்டு நஷ்டத்திற்குள்ளாக ஏதுவுண்டாகும்.

89. வியாபாரத்தில் யாராவது சரக்குகள் வாங்கும்போது மறதியாய் அதிகப்பணம் கொடுத்தால் அதை அபகரிக்க நினைக்காமல் அவர்களிடம் திரும்பக் கொடுத்து விடவேண்டும். அவர்கள் வீட்டிற்குப் போய்ப் பலதினங்கள் சென்று வந்து கேட்டபோதி

லும், அவர்கள் மெய்யாகவே பணத்தை மறந்து கொடுத்திருக்கின்றார்களென்று தெரிந்தால் எவ்வித தடையும் சொல்லாமல் அதனைக் கொடுத்து விடவேண்டும். இவ்வாறு செய்யாமல் அப்பணத்தை அபகரிக்க நினைத்தால் அதற்கிரட்டிப்பான பணம் நஷ்டமுண்டாகும்.

90. வியாபாரஞ் செய்வதிலும் பாபஞ்சேராத நல்ல சரக்குகளை விற்கும் வியாபாரத்தையே செய்யவேண்டும். கள், அபின், கஞ்சா முதலிய லாகிரி வஸ்துக்களை விற்றல், உயிர்க்கொலைக் கேதுவாகிய நிஷேதமான பொருள்களை விற்றல், சோறுவிற்றல், தண்ணீர் விற்றல் முதலிய வியாபாரங்களைச் செய்தல் கூடாது. இவற்றால் மிக்க பாபமுண்டாய் நரகஞ் சித்திக்கும்.

91. கோவில்களிலும், தர்ம சத்திரங்களிலும் வேலைக்கமர்ந்தால் பாரபக்ஷமின்றித் தர்ம காரியங்களை நடத்தவேண்டும். அங்குள்ள பொருள்களைக் கொள்ளையடிக்கலாது.

92. கோவில்களில் சுவாமி தரிசனம் செய்ய வருபவர்களை உள்ளே விடாமல் தடுத்தும், பணக்காரர்களை உள்ளேவிட்டும், ஏழைகளை வெளியே தள்ளியும், சிலபேர்களிடம் காசுவாங்கிக் கொண்டு அவர்களை உள்ளேவிட்டும், காசு கொடுக்காதவர்களைப் பிடரியில் கை போட்டுத் தள்ளியும் அக்கிரமம் செய்யலாகாது. அநேகம் பக்திமான்கள் காசில்லாக் குறைவால் கோவிலுக்குட் செல்லத் தடைப்பட்டு மனம் வருந்துவார்கள். ஆதலால், பக்திமான்களைப் பலவகைக் காரணங்களால் தடுக்கும் தேவஸ்தான வேலைக்காரர்கள் தெய்வ தண்டனைக் குட்பட்டுத் தீக்கதிக்காளாவார்கள்.

93. சத்திரங்களில் வேலைக்கமர்வோர் எல்லோருக்கும் சமத்துவமான போஜனமளிக்கவேண்டும். தம்மவர்க்கொன்றும், உத்தியோகஸ்தர்களுக் கொன்றும், ஏழைகளுக் கொன்றும் செய்தல் கூடாது. ஏழைகளுக்குக் கொஞ்சம் அரிசி கொடுத்து அவர்களைத் துரத்திவிட்டு, வயிறு புடைத்துவரும் பணக்காரர்களுக்கும், உத்தியோகஸ்தர்களுக்கும் பாயசம், நெய், பருப்பு வகையோடு சாப்பாடு போட்டால் மகா பாதகஞ்சேரும். இவ்வாறு செய்பவரை வரவேற்றுக் கொண்டாட நரகம் எதிர் பார்த்துக் கொண்டிருக்கும்.

94. நம் இந்துக்களின் ஆசாரத்திற்குக் குறைவாக மனைவியரை ரெக்ஷாவில் (ஆள் இழுக்கும் வண்டியில்) ஜதையாக ஏற்றிக்

கொண்டு மானங்கெட்டுத் தெருத் தெருவாய்ச் சுற்றலாகாது. இது, பலபேர் பார்த்துப் பரிகசிப்பதற் கிடமாகும்.

95. பெண்ணை, இஷ்டம்போல், வெளியில் சஞ்சரிக்க விடக் கூடாது. இதனால் விபரீதமும் மானக்கேடும் நேரும்.

96. துர்க்குணம் நிறைந்த பெண்களாலும் ஆடவர்களாலும் ஆடப்படும் நாடகத்தையும், செய்யப்படும் கதாப் பிரசங்கத்தையும் பார்த்தலும் கேட்டலும் கூடாது.

97. மனைவியர்க்குத் தொண்டு செய்துகொண்டு திரியலாகாது; அவ்வாறு செய்வதால் "பெண் வழிச்சேறல்" என்னும் குற்றமும், உலகநிந்தையும், மானக்கேடும் வந்து சேரும்.

98. ஒரு குடும்பத்திற்குத் தலைமைத் தன்மை பூண்டால் அக் குடும்பத்திலுள்ள எல்லோரையும் பாரபக்ஷமின்றிச் சமத்துவமாக நடத்தவேண்டும். ஒருகண்ணில் வெண்ணெயும் மற்றொரு கண்ணில் சுண்ணாம்பும் வைப்பதுபோலத் தமக்கு வேண்டியவர்க் கினிமையும், வேண்டாதார்க்குத் தீமையும் புரியலாகாது.

99. தமையன் மனைவி, சிற்றன்னைமார், பெரியன்னைமார், மாமி முதலியவர்களைப் பெற்றதாயினும் மேலாகவே கருதவேண்டும். தம்பி மனைவி, சிற்றப்பன் பெரியப்பனுடைய பெண்கள் முதலியவர்களைச் சகோதரிகளென்றே நினைக்கவேண்டும்.

100. அன்னியநாட்டுத் தீய ஆசாரங்களைக் கைவிட்டு, நம் இந்திய சீலாசாரங்களைக் கைக்கொண்டு, நீதி சாஸ்திரங்களைச் சிந்தித்துத் தானதருமங்களைத் தடையின்றிச் செய்து சதா சர்வகாலமும் தெய்வத்தைத் தியானித்துக் கொண்டேயிருக்கவேண்டும். இவ்வாறு செய்தால் பகவான் அருள்பெற்று எப்பொழுதும் நீங்காத இன்பத்தை அடையலாம்.

பாலபோதம் முற்றுப்பெற்றது.

(சற்குரு.)

தருமோபதேசம்.

(முன்தொடர்ச்சி புத்தகம்-5, சஞ்சிகை-5, பக்கம்-115)

எண்சீர்க்கழிநெடிலடி யாசிரிய விருத்தம்.

பணவுதவி செய்தெந்தத் தொழிலை யேனும்
பாங்காகச் செய்தேஜீ விக்கு மார்க்கம்

குணமாகக் காட்டிவைத்த பெரியோர்க் கென்றும்
குற்றங்கள் புரியாமல் இலாபஞ் சேரும்
வணமரகத் தொழில்புரிந்து பணத்தைச் சேர்த்து
வாங்கியதைக் கொடுத்துநன்று வாழ வேண்டும்
மணம்புரிந்து வைத்தோர்க்கு மோசஞ் செய்யும்
மட்டியென்றுங் கெட்டழிந்து மயங்கு வானே. (எகூ)

அன்னமிட்டார் வீடதனிற் கன்ன மிட்டே
அனியாயஞ் செய்கின்ற அற்பர் போல
நன்னயஞ்செய் தோர்தொழிலுக் கிடையூ றாக
நாடியே பலதீங்கு தினமுஞ் செய்வோர்
இந்நிலத்தில் வஞ்சனையாய்ப் பணத்தைச் சேர்க்க
இயற்றிலருந் தொழில்கெட்டு மேனி கெட்டு
மன்னியதோர் குடிகெட்டுத் துணியு மின்றி
வாய்த்தவிடுங் கிட்டாமல் வருந்து வாரே. (அ0)

ஒருவரொரு நல்லோருக் குதவிசெய்ய
உத்தேசிக் குஞ்சமய மதனைத் தட்டிப்
பெருமைமிகு மவர்மீது கோள்கள் சொல்லிப்
பிழையேற்றி யேமிகவும் வெறுப்புண் டாக்கி
வருமுதவி தனைத்தனக்குச் செய்யு மாறு
வற்புறுத்தி யவரிடத்தில் வாய்ப்ப கட்டால்
பொருள்கவர்ந்து மகிழ்கின்ற பேய ரெல்லாம்
பொறுக்கவொண்ணு நரகமதிற் புகுவர் தாமே. (அக)

செம்பையார்.

நமது பெருங்குறை.

(107-ம் பக்கம் தொடர்ச்சி).

நமது பெருங்குறை என்றெடுத்துப் பெண்கல் விக்குரித்தான விஷயங்களை வரைவது (Out of point) "மற்றொன்று விரித்தல்" என்னும் குற்றத்தில் நான் ஆழ்ந்ததாகும் என்றுசிலர் கருதக்கூடும். அஃதப்படியன்று. நமது இந்திய மக்கள் பெண் கல்வியைப் பெரிதும் கவனிக்காமையாலேயே தான் இத்தகைய இழிவான நிலையில் இருக்கிறார்களென நான் கருதுவதனால் இதுவே நமது பெருங்குறையாகக் கருதுகின்றேன். ஆகையால் இவ்வொன்றை விரிக்கிறேனென நண்பர்கள் கடியார்களெனநினைக்கின்றேன்.

போன சிலனில் திடீரென்று நம்மவர்கள் "பெண்கல்வி" என்ற பெயரைக்கேட்ட உடனேயே சட்டென்று கேட்கும் ஆக்ஷேபங்களை ஒவ்வொன்ருக எழுதிப் பதில் வரைவதாக எழுதியபடி ஆரம்பிக்கின்றேன்.

1 வது ஆக்ஷேபம்:—பெண்கள் படித்தால் அந்நிய ஆடவர்களுக்குக் கற்பிழக்கும் கடிதம் வரைந்து சோரம்போய் விடுவார்கள்" என்பது.

இது புத்தியுள்ளார் ஆக்ஷேபனையன்று. நமது வீட்டுப்புறக் கடையில் ஜலசௌகரியத்துக்காக ஓர் கிணறு தோண்டி வைத்துக் கொண்டிருக்கிறோம். ஒருவர் அக்கிணற்றைப் பார்த்து, "ஐயா! பெண்கள் இருக்குமிடங்களில் இப்படிக்கிணறு வைத்துக்கொண்டிருக்கலாமா? இது ஆபத்கல்லவா?" என்று நம்மிடம் சொல்வதும், நாம "ஆம். இது வாஸ்தவந்தான்" என்று கிணற்றை மூடி விடுவதும் புத்தியுள்ளார் செய்கைகளாகுமா? "சாக நினைப்பார்க்குச் சமுத்திரம் முழங்காலளவுதானே" சாகவேண்டு மென்றால் எப்படியும் சாகலாமல்லவா? அதற்குக் கிணற்றையா மூடிவிடுவது? காலில் முள்தைத்து விட்டால் தலையையா தடவிப்பார்ப்பது? இன்னும் பெண்களுக்குக் கண்களும் வாயும் இருக்கப்போ யல்லவோ, அவர்கள் கண்களின் உதவியால் ஒருவனைப் பார்த்து விரும்பி, வாயால் அவனோடு பேசிக் கற்பை இழக்கிறார்களென எவராவது ஊமைப்பெண்ணை மணக்க முன்வருவார்களா? அம்மம்ம! இக்காலத்திலா? ஏதோ ஈஸ்வர சங்கற்பத்தால் ஒருபெண் ஏதாவது ஒரு அவயவத்தை இழந்துவிட்டால் அப்பெண்ணை மணந்தவர், அவளிடம் இரக்கமென்பதையே காட்டாது, அவளுக்கு ஜீவனம்சைக்குக் கூட ஏதாவது வழி தேடிவிடாது, அவளை விலக்கித் திண்டாடித் தெருவில் நிற்கும்படியாகச் செய்து, மறுமணம் புரியும் இக்கலிகாலத்திலா கண்ணில்லா மங்கையை மணக்கப் போகிறார்கள். அவ்வாறு ஒருகாலும் செய்ய மாட்டார்கள். ஆகையால், கற்ற மாதர்கள் அந்நிய ஆடவர்களுக்குக் காதல் கடிதம் வரைந்து சோரம் போய் விடுவார்களென்பது அபக்குவமுடையார் கூற்றென்க. ஏற்பட்ட குணத்தைமாற்ற ஒருவராலும் முடியாது என்க. இதை நோக்கியே நமது தென்தேயத்தில் "குணம் சுட்டால்தான் தீரும், பணம் செலவழித்தால்தான் குறையும்" என்ற பழமொழி சர்வ சாதாரணமாக வழங்கி வருகிறது. குணம் ஏற்பட்டிருப்பது அவரவர் தலைவிதிப்படியே யாகும்.

"ஆவாரை யாரே யழிப்ப ரதுவன்றிச்
சாவாரை யாரே தவிர்ப்பவ—ரோவாம
லையம் புகுவாரை யாரே விலக்குவார்
மெய்யம் புவியதன் மேல்."

நாய்வாலை நிமிர்க்க முடியுமா? அட்டையைப் பிடித்துத் தொட்டியில் கிடத்தினால் அது கிடக்குமா? அதற்காக, சொல்லச் சொல்ல

விருத்தியாவதும், ஞானத்தை ஊட்டுவிப்பதும், இன்பத்தை மடுப்பதும், அழிவில்லாப் புகழைக்கொடுப்பதும், ஏற்ற சமயத்தில் உற்றூர்போல உதவக்கூடிய பெருமையை நல்குவதுமாகிய கல்வியைக் குறைக்கலாமா? தீக்குணமுடையவரும் கல்வியால் சீர்திருத்தமடையக்கூடும். கற்ற பெண், தீங்குடையவளா யிருந்தாலும் கல்வியால் சிறிதாவது சீர்திருத்த மடையாளா? பகுத்தறி வில்லாதவைகள் கொள்கை மாற்றமுடியாது எனினும், பகுத்தறிவுள்ள ஜென்மம், நிலை பெயரும் போதாவது பயப்படாதா? பெண் வர்க்கத்திலுற்பவித்து, அற்பக்குற்றம் செய்து அளவில்லாத் துயரெய்திக் கணவனால் கல்லுருவம் பெற்ற அகலிகையை நினைக்கும் போதாவது அவர்கள் கலங்காரகளா? எவ்வாறுனுலுமவர்கள் ஆகுக. அவர்களை முன்னிட்டு மாசற்ற நெஞ்சுடைய அநேகம் பெண்மக்களை நாம் கல்விகற்க விடாமல் செய்ய யூகிப்பது அழகா? அது நமது பெருங் குறையன்றே. அவர்கள் இயற்கையிலே நற்குணமுடையவர்களா யிருந்தாலும், தூண்டுதல் இல்லாத விளக்கென, மங்கி இருப்பார்கள். கல்வி என்னும் தூண்டுகோலால் அவர்களது அறிவாகிய மனோதீபத்தை நாம் தூண்டிவிட்டால் எவ்வளவு சிறப்புடையவர்களாவார்கள்.

ஆகவே, கல்வி பெண்களைக் கெடுத்து விடுமென்பது பொருந்தாதென்க.

2 வது ஆக்ஷேபம்:—“முற்காலத்தில் பெண்கள் படிக்க வில்லையே. இக்காலத்திலும் பெண்கள் படிக்காவிட்டால் என்ன?” என்பது.

இந்த ஆக்ஷேபத்தின்பொருளைக்கொண்டு சிலவயது முதிர்ந்த ஸ்திரீகளும் “நாங்கள் எல்லாம் படித்துத்தான் குடித்தனத்தை நடத்தினேமோ? நாங்கள் சரியாய் இருக்கவில்லையோ?” என வினவுகிறார்கள். படியாத அவர்கள் அவ்வளவு சரியாக இருந்தார்களானல் படித்தவர்கள் எவ்வளவு சரியாக இருப்பார்கள்!. சாகபக்ஷணியாக இருப்பவர்களும் இரக்கமற்றவர்க ளாகத்தான் இருக்கிறார்கள்; இதுபோல் படித்த பெண்களும் கெட்டவர்களாகவே யிருக்கிறார்கள். ஆதலின், பெண்கல்வி அவசியமில்லையென ஒரு நண்பர் வரைந்தார். சிங்கத்துக்கும் மாட்டுக்கும் வித்தியாசமில்லையா? மாமிசம் புசியாதார் இரக்கமற்றவர்களா யிருந்தால் மாமிசம் சாப்பிடுவோர் கொலையாளிகளாய் இருக்கமாட்டார்களா? இதுபோல் படித்த பெண்கள் சிறிது கெடுதியுடையவர்களா யிருந்தால் படிக்காத பெண்கள் மிகுந்த கெடுதியுடையவர்களா யிருக்கமாட்டார்களா? இனி அக்காலத்தில் பெண்கள் படிக்கவில்லை எனக் கூறுதலும் அறியாமைக் கூற்றேயாகும். எண்ணிக்கைக் கடங்காத பெண்மக்கள் வாசித்திருக்கிறார்கள்.

சங்கமருவிய நூல்களில் ஒன்றாகிய புறநானூற்றில், அநேக மாதர்கள் செய்புள் வரைந்திருக்கிறார்கள். அக்காலத்தில் கற்ற பெண்களின் ஜாப்தாவை வரைய நமது தருமசீலனும், இடங் கொடானென அஞ்சுகின்றேன். ஆகையால் விரிவாக அறிய வேண்டு வோர், நமது "பெண்கல்வி" என்னும் புத்தகத்தைப் பார்த்தறிந்து கொள்வார்களாக.

3 வது ஆக்ஷேபனை:—சட்டி சுறண்டும் பெண்களுக்குப் படிப் பேன்? எவ்வளவு கற்றபோதிலும் பெண்கள் அடுப்பூதத்தானே செல்ல வேண்டும், என்பது.

இந்த ஆக்ஷேபனை பொருத்தமுடைய தல்ல. பெண்கள் எந் நேரத்தும் அடுப்பூதிக் கொண்டிருக்கிறதில்லை. காலையில் 6-மணி க்கு எழுந்திருப்பதாக வைத்துக்கொண்டாலும் உழைக்கவேண் டிய நேரம் 16-மணிகள் இருக்கின்றன. (இரவு 10-மணிக்குப் பின் படுத்துறங்கலே நலமென்பது சுகாதார சாஸ்திர மர்மம்). இந்தப் பதினறு மணி நேரங்களில் 10-மணியை அடுப்பு வேலைக்கென்று ஒதுக்கி வைத்துவிடுவோம். மீகம் 6-மணி யிருக்கிறது. இந்த 6-மணி நேரங்களில் என்னென்னெல்லாம் செய்யலாம். எத்தனை நன்னூல்கள் வாசிக்கலாம். மாசன் என்ற வைத்தியர் ஒரு நோயாளி வீட்டிலிருந்து மற்றொரு நோயாளி வீட்டிற்குப் போகும்பொழுது "லுக்ரீவிஸ்" என்னும் கிரந்தத்தை மொழி பெயர்த்திருக்கிறார். வயிற்றுப்பிழைப்புக் கில்லாத எலியூ என்பவர் கருமார வேலைசெய்து கொண்டே அநேக பாஷை கற்றிருக்கிறார்.

ஆ! காலத்தின் அருமை என்னே! பெண்கள் கல்லாவிடின் தங்கள் வேலை முடிந்தவுடன் என்ன செய்கிறது, என்ன முடிக் கிறது என்றறியாராகி, நிமிஷ, நிமிஷமாய், மணி, மணியாய்க் கழித் துத் தங்கள் வாணாளை வீணாளாக்கி, உடம்பைத் துருப்பிடிக்கச் செய்து கொள்கிறார்கள். பின்னர் தம் சகாவைக் கண்டுவிட்டால், பேசத்தகாதவை எல்லாம் பேசி, உயிரோடிருக்கும் நாட்களை, அபல மாக்குகின்றனர். ஒருத்தி, கற்றகாரிகையாக இருப்பின், தன்னு டைய ஓய்வு நேரங்களில் கல்லூரியில் கற்ற, தையல்வேலை முத லிய வற்றைச் செய்து, தன் பிள்ளைகளுக்குத் தானே சட்டை முதலியவை தைத்துக் கொடுப்பது மன்னியில் அப்பிள்ளைகளுக்கு நாகரீகமான பேச்சுக்களையும், "எறும்பூரக் கல்லும்தேயும்" என்ற வாறு சிறுகச் சிறுகக் கற்றுக்கொடுத்து "இளமையிற் கல்வி சிலை யில் எழுத்து" என்பதை நிரூபிப்பாள் என்க.

4 வது ஆக்ஷேபனை:—பெண்கள் கற்றால் புருடனுக்கடங்கி நடக்கார்கள், என்பது.

இதுவும் தகாத ஆக்ஷேபனையே யாகும். ஆடவருக்குள் பெண்கள் அடங்கினவர்கள்தாம் என்று சகல வேதங்களும் அறை

கின்றன. கிறிஸ்தவ மதத்தில் கூட ஆதாம் என்பவன் முதலில் படைக்கப்பட்டதாகவும், இரண்டாவதாக ஏவாள் என்பாள் படைக்கப்பட்டதாகவும் தெரிகின்றன. ஊர்க்குருவி உயரப்பறந்தாலும், வானத்துக்குள் அடங்குவது போலவும், அதுவே பருந்தாக மாற முடியாதது போலவும், பூனைக்குட்டி புலிக்குட்டியாக முடியாதது போலவும் பெண்கள் எவ்வளவு கற்றாலும் ஆடவர்களுக்குள் அடங்கினவர்கள்தாம் எனவுணர்க.

5 வது ஆக்ஷேபனை:—பெண்கள் படித்தால் உத்தியோகத்துக்குப் போகப்போகிறார்களோ? என்பது.

அன்பர்களே!

நாம், மரத்தை வளர்க்கிறோம். அது நிழல்தானா கொடுக்கிறது? நாம் உண்ணவும், வசதியாகக் குடியிருக்கவும் அது, தானே முறையே விறகுகளாகவும் உத்தரம் தூண்களாகவும் உதவி செய்கிறது. ஓராறு ஓடுகிறது. அது அருந்தத்தானா ஜலம் உபகரிக்கிறது? நமக்குரித்தான உணவுப்பொருள்களை வளர்க்க அது வேண்டியதில்லையா? நமது உடம்பைச் சுத்தம் செய்ய அது உபகாரம் செய்யவில்லையா? அதுபோலப் பெண்கள் உத்தியோகத்துக்குப் போக வேண்டாம். அதற்கும் அவர்கள் இலாயக்கில்லை. அவர்கள் அதற்குத்தகுந்தவர்களா யிருந்தால் “உத்தியோகம் புருஷலக்ஷணம்” என்ற பழமொழி பழக்கத்துக்கு வருமா? எந்த மதக்கிரந்தத்திலாவது, பெண்கள் சம்பாதித்துப் புருடனுக்குக் கொடுக்க வேண்டுமென வரையப்பட் டிருக்கிறதா? ஆகையால் பெண்களுக்குக் கல்வி உத்தியோகத்துக் கல்ல.

இன்னும் கல்வியை வயிற்றுப் பிழைப்புக்காகக் கற்பது பரிதாபம்! பரிதாபம்!! கல்வி என்ன சுரைக்குடுக்கையா? கல்வியை வயிற்றுப் பிழைப்புக்கென்றே கருதி விட்டால் மக்கட்கும், மாக்கட்கும் என்ன வித்தியாசம்.

“தெள்ளியநன் மாமதிக்கும் சோராத்ம வன்மைக்கும்
வெள்ளை மதி போக்குதற்கும் மெய்க்கல்வி—அல்லால்
* அகட்டுப் பிழைப்புக் கெனவே யறைதல்
† பகட்டுப் படிப்புரையாம் பார்.”

இங்ஙனம் எழுதிக் கொண்டு போனால் விரிகின்ற காரணம் பற்றி இத்தோடு விடுப்பாம். அடுத்த சஞ்சிகையில் பெண்கள் என்னென்ன நூற்கள் கற்கலா மென்பதைப் பற்றியும், இன்னும் மற்றோர் பகுதித் தொடர்ச்சியையும், நமது இன்னொரு பெருங்குறையாம் தாய்ப்

---

* அகட்டுப்பிழைப்பு = வயிற்றுப்பிழைப்பு.

† பகட்டுப்படிப்பு = மேல்பூச்சைப்போன்ற அற்பக்கல்வி.

பாஷையில் அபிமான மின்மை என்ற விஷயத்தையும் தொகுத்து வரைவாம்.

(இன்னும் வரும்.)

மூ. பே. மாரியப்ப நாடார்.
18, தெற்குக் காட்டன் ரோடு
தூத்துக்குடி.

நீதி வாக்கியங்கள்.

(முன்தொடர்ச்சி புத்தகம்-5, சஞ்சிகை 6, பக்கம் 138.)

87. உனக்குப் பிரியமுள்ள ஒருவரை மாத்திரம், 'இவர் ஒருவரே உலகத்திற் சிறந்தவர்' என்று பேசாதே; இன்னும் எத்தனையோ பேர் சிறந்தவர்களிருப்பார்கள். ஆகலின், நீ ஒருவரை மட்டும் புகழ்ந்து பேசுவதால் அவர்கட்கு இழிவே யுண்டாகும்.

88. பெரியோர்களைக் கண்டால் வணக்கமாயிரு; கால் மேல் கால் போட்டு ஆட்டிக்கொண்டு அவர்களை அவமதித்துப் பேசிக் கொண்டிராதே.

89. நீ எவ்வளவு படித்திருந்த போதிலும் பல பெரிய மனிதர்களேனும் சாதாரண மனிதர்களேனும் உன்னிடம் வந்திருக்கும் போது, அவர்களைக் கவனியாமல் புத்தகத்தையோ பேப்பரையோ பார்ப்பதுபோல் அவற்றைத் தற்பெருமையாகப் பார்த்துக்கொண்டிருப்பதும், ஐந்து நிமிஷத்திற் கொருமுறை அவர்களோடு ஒரு வார்த்தை பேசிவிட்டுப் பழையபடி அவற்றைப் பார்ப்பது மாக விராதே. இது மிகவும் அறிவற்ற செய்கை. இதனால நீ 'கற்றறி மோழை' என்று பலராலும் தூற்றப்படுவாய்.

90. உன்னைத்தேடி மனிதர்கள் வந்தால் அவர்களோடு உடனேபேசி, அவர்கள் கோரிவந்த காரியத்தைச் சீக்கிரம் முடித்து அவர்களை அனுப்பிவிட்டு அதன்மேல் உன் காரியத்தைப்பாரு. வந்தவர்களைக் காக்க வைத்துவிட்டு நீ உன்னுடைய வேலையிலிராதே. இதனால் நீ பலராலும் 'அகங்காரி' என்று தூற்றப்படுவாய்.

91. உன்னிடம் வந்தவர்களோடு அனாவசியமாக நெடுநேரம் பேசிக்கொண்டிருந்து உன் காரியத்தைக் கெடுத்துக் கொள்ளாதே. அவர்களிடம் பேசவேண்டியவற்றை விரைவில் பேசிமுடித்து விட்டு உன் காரியத்தைப் பாரு.

92. நீ ஒருவரிடம் வித்தை கற்றுக்கொண்டால், 'நான் இன்னவரிடம் இதனைக் கற்றேன்' என்று அவர்கள் பெயரைச் சொல்லிக்கொண்டே கௌரவத்தைத் தேடிக்கொள்; அவர்கள் பெயரை

மறைத்துவிட்டு நீயே கௌரவம் அடைய முயற்சி செய்தால் உனக்குத்தாழ்வே உண்டாகும். இந்தக்குருத்துரோகமானது உன்னை ஈடேற வொட்டாது.

93 நீயே பிரயாசைப் பட்டுப் படித்துக் கல்வியிற்றேறி நூற்களைச் செய்து கௌரவமடை. கல்வியில் தேர்ச்சி யடையாமலிருந்து கொண்டு, அன்னியரிடம் புத்தகங்களை யெழுதித்தரச்சொல்லி வாங்கி அவற்றை நீயே எழுதினதாக வெளிப்படுத்திப் போலிப் புகழ்தேட நினையாதே. இதனால் உனக்கு மிக்க இழிவே யுண்டாகும்.

94. வித்வான்களை அவமதித்துப் பேசாதே; அவர்களிடம் பணிவாகவே யிரு.

95. சுயபாஷையையும் செய்யுட்களையும் அசட்டை பண்ணாதே. செய்யுட்பாடத்தால் கல்வியில் மிகத்தேர்ச்சி யடைவாய்.

96. இளமையில் பாடங்களை மனனஞ்செய்யும் பழக்கத்தை அதிகமாக அனுசரிக்க வேண்டும். இந்தப் பழக்கமானது நல்ல கல்வித் தேர்ச்சியை உண்டாக்கும்.

97. இங்கொன்றும் அங்கொன்றுமாகப் பாடங்களை எடுத்துப் படிக்கும் கதம்பப்படிப்பால் பயனில்லை. எந்த நூலையும் முற்றுற முறையே படித்தால்மாத்திரமே கல்வியில் நல்ல தேர்ச்சியடைய முடியும்.

98. புகைவண்டியில் போகும்போது, விசாலமான இட மிருக்கையிலேயே, குழந்தைகளுடனும், மூட்டை முடிச்சுக்களுடனும் அவஸ்தைப்பட்டு ஏறவரும் ஜனங்களைக் கழுத்தில் கைவைத்துக் கீழே தள்ளாதே. அவ்வாறு செய்தால் நீயும் ஒருசமயம் இந்த அவஸ்தையை அடைவாய்.

99 உலகத்தில் எல்லோரையும் சகோதர ரென்றே நினை. துன்ப முற்றோர்க்குதவி செய்யாமல் பார்த்துக்கொண்டு மௌனமாயிராதே.

100. எதைச்செய்யினும் தெய்வத்தைத் தியானித்துக் கொண்டேசெய். அதனால் நீ எதிலும் ஜெயமடைவாய்.

நீதிவாக்கியங்கள் முற்றுப் பெற்றன.

உண்மைப் போதகன்.

தூஷிப்ப தொழி.

(தமிழ் நாவலர் & பப்ளீஷர், எஸ்-கே-கோவிந்தசாமி பிள்ளை, எழுதியது.)

சகோதர சகோதரிகாள்!

“அன்னியரைத் தூஷணைசொல்லி அழையாதே—அதனால்

வரும் பயனை அடையாதே" என்று பெரியோர் நீதி கூறியிருக்கின்றனர். ஆதலின்,

ஸ்ரீமத் அகண்ட பரிபூரண சச்சிதானந்த பரம்பொருளின் கிருபா நோக்கத்தால், இக்கடல்சூழுலகின்கண் ஆறறிவுடைய மானிடராகப் பிறந்த நாம் ஒவ்வொருவரும், ஒருவரை யொருவர் தூஷிக்காமல், அன்னியரையும் தம்மைப்போன்ற மானிடரெனக் கருதி "ஒருவரையும் பொல்லாங்கு சொல்லவேண்டாம்" என்று சான்றோர் கூறியதை மறவாமல் நடப்பதே மானிடர்க்குரிய ஒழுக்கம். இஃதைக் கல்லாத மாந்தர்க்குக் கற்றுணர்ந்தார் சொற்கூற்றம்.

ஆதலின், பெரியோர் சொல்லும் இந்நீதியைக் கொள்ளாமல் இத்தொல்லுலகிலுதித்த சிலர் தம்முடைய அற்பமதியால் அன்னியரைத் தம்மைப்போன்ற மானிடரென் றுணராமல், கருணாநிதியாகிய கடவுளின் அருளால் உலகிற்றோன்றிய எண்பத்து நான்கிலட்சம் ஜீவபேதங்களில் மானிடர் உயர்வென்பதை யுணராமல், கடவுளமைத்த கட்டளையைக் கடந்து, மானிடஜென்ம மெடுத்தவர்களைக் கீழ்வருமாறு கூறி அழைக்கின்றனர்:

எவ்வாறெனில், பதரென்றும், குட்டிச் சுவரென்றும், எருமைக் கடாவே என்றும், கழுதையென்றும், குரங்கென்றும், பிணமென்றும், துடைப்பக் கட்டையென்றும், இன்னும் சொல்லுதற் கரிய நாமங்களைச் சொல்லியு மழைக்கின்றனர். இவர்கள் இவற்றைத் தாழ்மையுடையவைகளெனக் கருதி உவமையில் வைத்துக் கூறினும், இவைகள் ஒவ்வொருவகையில் பிரயோசன முள்ளனவாகவே பெரியோர்களால் கூறப்பட்டிருக்கின்றன. இதனைக் குமரேசர் சதகத்தில்,

"பதராகி லுங்கன வீபூதியை விளைவிக்கும்
பழமைபெறு சுவராகி லும்
பலருக்கு மறைவாகு மாடுரிஞ் சிடுமெலம்
பன்றிகட் குபயோக மாம்

கதமிகு கடாவென்னி லுழுதுபுவி காத்திடுங்
கழுதையும் பொதி சுமக்குங்
கல்லெனிற் றேவர்கட் காலயமு மாம்பெருங்
காண்புற்று மரவமனை யாம்

இதமிலாச் சவமாகி லுஞ்சிலர்க் குதவி செயு
மிழிவுறு குரங்கா யினு
மிரக்கப் பிடித்தவர்க் குதவிசெயு மாறுகோ
லேற்றமா ளிகை விளக்கும்.

மதமது மிகும்பரம லோபரா லுபகார
மற்றொருவ ருக்கு முண்டோ

மயிலேறி விளையாடு குகனேபுல் வயனீடு
மலைமேவு குமரேசனே."

என்பதாலுணர்க. அன்றியும், இராமச்சந்திரக் கவிராயரும்,

"கல்லா லயமாந் தேவருமாங்
கழுதை கசடர் பொதிசுமக்கும்
கடாவோ வுழுது பயிரிடற்காம்
கட்டம் பன்றிக் கிரையாகும்

புல்லே றீசர் வாகனமாம்
பொதியுஞ் சுமக்கும் பிணமெனிலோ
பூசி முடித்து மறையோர்க்குப்
பொருளை யீந்து புகழெய்தும்

மல்லார் குட்டிச் சுவரெனிலோ
மாடு முரைஞ்சு மறைவாகும்
மதியாத் துடைப்பந் தானெனிலோ
மாட கூடந் துனைவிளக்கும்

அல்லா துலுத்தன் றனக்கிணையா
யாரை யுரைப்பேன் புவிமீதில்
அவனைக் குறித்துக் கூறுமிடத்
தவனுக் கவனே சரிதானே."

என்று கூறியிருக்கின்றனர். இவ்வாறு இவைகளே பயனுள்ளன வாகக் கூறப்பட் டிருக்கும்போது, மானிடர் எவ்வளவு பயனுடைய வர்களாயிருப்பார்கள். அப்படியிருக்க அவர்களைத் தூஷிக்கலாமா?

இன்னும், இப்பாடல்களுள், உலோப குணமுடையவனே இப் பொருள்களினுந் தாழ்ந்தவனாகக் கூறப்பட்டிருக்கிறான். உலோப குணமுடையவனது இலட்சணம் பிறரைத் தூஷித்துப் பேசுதலாம். ஆகவே, மானிடரை மேற்கூறிய வாக்கியங்களால் தூஷித்துப்பேசும் உலோபி, தன்னுடைய வாக்கினாலேயே அந்தத்தாழ்ந்த பொருள் களினும் தன்னைத்தாழ்ந்தவனாகக் காட்டிக் கொள்ளுகிறான். ஆத லின்,

என தன்புள்ள சகோதர சகோதரிகாள்!

இனியேனும், நமது ஞானமாதா நவின்ற "பொல்லாங் கென் பவை யெல்லாந் தவிர்" என்ற வேதவாக்கியத்தைத் தங்கள் சிரமேற் கொண்டும், "கீழோராயினுந் தாழவுரை" என்ற அமுத வாக்கியங் களைக் கடைப்பிடித்தும், அவ்வழி நடந்து கனம் பெறுவீர்களாக. எல்லாம் வல்ல ஏகநாயகன் திருவடிகளை, மனம், மொழி, மெய்க ளால் வழிபடுகின்றனன். ஓம்தத்ஸத்.

உ

கடவுள் துணை.

சோதிட விளம்பரம்.

நேயர்காள்!

தங்கட்கு ஜாதகங்கள் கணிக்கவேண்டினும், அல்லது பல னெழுத வேண்டினும், ஆலயம், மனை, முதலியவைகளுக்குப் பொரு த்தபலன் எடுத்தெழுதவேண்டினும், புத்திரதோஷநிவர்த்திக்கு (கர்ம நாமப்படி) தோஷநிவர்த்தி சாந்திவிதிகள் எடுத்தெழுத வேண்டி னும், அல்லது நஷ்டஜாதகம் கணித்துப் பலனெழுத வேண்டினும், ஆரூடம் பார்க்கவேண்டினும் அடியிற் குறித்த விடத்திற்கெழுதி விவரம் தெரிந்துகொள்ளலாம்.

குறிப்பு:—இதற்கு இராமநாதபுரம் ஸ்ரீமத் பாஸ்கர சேதுபதி மகாராஜாவின் அருமை மைத்துனர் ஸ்ரீமான் V. தங்கவேல் சாமி த்தேவர் அவர்களாலும் மற்றும் அனேகம் கனதன வித்வான்களா லும் (நன்கு மதிக்கப்பெற்று) நற்சாக்ஷிப் பத்திரமும் அளிக்கப்பெற் றிருக்கிறது.

உடனே எழுதி விவரந்தெரிந்து கொள்ளுங்கள்.

V. வைத்தியநாதஸ்வாமி ஸ்தபதி.
ஜோதிஷர்,
"அகஸ்தியர் சோதிடசாஸ்திர சாலைத்" தலைவர்,
திருவாரூர்,
தஞ்சாவூர் ஜில்லா.

வெளியாகி விட்டது! வெளியாகி விட்டது!!

எது! எது!! எது!!!

இருவிழிகள் வாண்முகத்திலிருந்தாலும், கல்வியில்லாத கண் புண்ணாகு மென்பதை, "திருக்குறள்" "புறநானூறு" "கம்பராமா யணம்" முதலிய, தெய்வப்புலவர்கள், இயற்றிய பாக்களிலிருந்து மேற்கோளெடுத்து நிரூபிக்கப்பட்ட

"பெண் கல்வி"

என்ற அருமையான புத்தகம், வெளியாகி விட்டது. தனிப்புத்த கம் வேண்டுவோர், 2½ அணா ஸ்டாம்பு கீழ்கண்ட விலாசத்துக்கு அனுப்பிப் பெற்றுக் கொள்ளலாம். வியாபாரிகளுக்குத் தக்க கமி ஷன் கொடுக்கப்படும். வியாபாரிகள் எமக்கு எழுதுவார்களாக.

எமது விலாசம்.
மு. பே. மாரியப்ப நாடார்
18, தெற்குக் காட்டன் ரோடு
தூத்துக்குடி.

ஸ்ரீபாலன்.

ஓர் இனிய தமிழ் நாவல்.

இஃது, ஸ்ரீபுராணத்தினின்றும் எடுத்து இனிய தமிழ் நடையில் ஆடவர், பெண்டிர், முதலியவர்கள் விரும்பி வாசிக்கத் தக்க விதமாக எழுதப்பட்டிருக்கிறது. இந்நாவலை வாசிப்பதால் கற்பின் மகிமை, சத்புருஷர்களின் லக்ஷணம், கற்பின் உயர்வு, சிநேகத் துரோகிகள் தீங்கடைதல், வஞ்சனைக் காரர்கள் சஞ்சலப்படல், பொறுத்தார் அரசாளுதல், பொங்கினர் காடுறைதல், வேட்டகம் புகுவாருக் குண்டாம் இழிவு, முயற்சி திருவினை யாக்குதல், இன்னாரை யொறுத்தல், அவர் நாண நன்னயஞ் செய்துவிடல் முதலிய பல அரிய நீதிகளை யெல்லாம் நன்குணரலாம். சொற்ப பிரதிகளே அச்சிட்டமையால் முன்னதாக எழுதுகிறவர்களுக்குத் தான் புத்தகம் கிடைக்கும். இதன் விலை அணா 10.

உதயணன்.

இது, சிறு பஞ்ச காவியங்களிலொன்றாய்ச் செய்யுள் ரூபமாக இருந்த உதயண காவியத்தைத் தழுவி வசன நடையில் எழுதி வெளியிடப் பட்டிருக்கிறது; இதில் பல நீதிகள் அடங்கி யுள்ளன. இந்நூலை வாசிப்பதால் உதயண காவியத்தை ஒரு முறை பாடங்கேட்டது போலாகும்; இந்நூல் வாசிப்போர்க்கு மிக்க இன்பத்தை யளிக்கும்; ஆடவரும் பெண்டிரும் விரும்பி வாசிக்கத் தக்கது. இதில் சொற்ப பிரதிகளே அச்சிட்டமையால் முன்னதாக எழுதுகிறவர்களுக்குத்தான் புத்தகம் கிடைக்கும். விலை அணா 8.

தருமசீலன் ஆபீஸ்
26. ஆச்சாரப்பன் தெரு, ஜார்ஜ்டவுன், சென்னை.

சுகாதார போதினி.

இது, ஒருமாதாந்தத் தமிழ்ச் சஞ்சிகை; இதில் சுகாதாரம், வைத்தியம், மெஸ்மரிஸம், ஹிப்னாடிஸம், கைத்தொழில் முதலிய விஷயங்கள் பிரசுரிக்கப்படும்.

வருஷசந்தா ரூபா ஒன்றுதான். மாதிரிக்காப்பி இனாமாக அனுப்பப்படும்.

விலாசம்:—சுகாதார போதினி ஆபீஸ்,
12, அப்புமேஸ்திரி தெரு, ஜி, டி, மதராஸ்.

21045

தருமசீலன் பிரஸ் விளம்பரம்.

நமது தருமசீலன் அச்சுக்கூடத்தில் தமிழிலும், இங்கிலீஷிலும், சகாயமான சார்ஜில் அச்சுவேலைகள் வெகு சுத்தமாகச்செய்து கொடுக்கப்படும். வெளியூரிலிருந்து, நம் ஆபீஸில் அச்சுவேலைகள் செய்துகொள்ளப் பிரியமுள்ளவர்கள், அச்சிடவேண்டிய காப்பிகளை நமக்கனுப்பி, பாரம் ஒன்றுக்கு ஒருரூபா விகிதம் புரூப் சார்ஜும் கொடுத்தால் அவ்வேலைகளை நாமே புரூப் பார்த்து முடித்துக்கொடுப்போம்.

மானேஜர்,
தருமசீலன் பிரஸ்,
1/2பாலகிருஷ்ணன் சந்து,
ஆச்சாரப்பன் தெரு, ஜி. டி. சென்னை.